# உழைக்கத் தெரிந்தும் பிழைக்கத் தெரியாதவர்கள்!



நாள் முழுக்க கடுமையாக உழைத்து 100 முதல் 400 ரூபாய் வரை சம்பாதிக்கிற பல்துறைத் தொழிலாளர்கள் உண்டு.

இவர்களது வாழ்க்கையில் என்ன பெரிய மாறுதல்கள் வந்துவிட்டன என்கிறீர்கள்?

இவர்களுள் சிலர் இருப்பதில் சிறிய அளவில் சேமித்து, கெட்ட பழக்கங்களுக்கு ஆளாகாமல், இதுவல்ல என் வாழ்வின் உயரம், இப்படியே தொடர்ந்தால் அதுவே, துயரம்; நான் உயர்ந்தே திருவேன் என்று கங்கணம் கட்டிக்கொண்டு இலட்சியத்துடன் போராடும்போது, மேஸ்திரி ஆகி, கண்காணிப்பாளராகி, ஒப்பந்தக்காரர் ஆகி, மகத்தான உயரங்களைத் தொட்டவர்கள் உண்டு. ஆனால் இவை மட்டுமே தகுதிகள் ஆகிவிடா. சிரிக்கத் தெரியாதவனைச் சிறப்புகள் சென்றடையா. ஊர் என்ற முகமும், சுடு சொற்களும், பிறரிடம் நன்கு கலந்து பேசத்

# குறை சொன்னால் கோபம் வருவது ஏன்?



"நல்லாத்தான் பேசினீங்க. ஆனால் இரண்டு இடத்தில் பேச்சுக் குறிப்பை விட்டுட்டு, தேடிக் கண்டு பிடிக்க அதிக நேரம் எடுத்துக்கிட்டீங்க. கூட்டம் அதுக்குள்ள சலசலத்துவிட்டது" என்றார், மேடையிலிருந்து பேசி விட்டு இறங்கியவரிடம் அவரது நண்பர்.

பாராட்டத்தான் நெருங்கி வருகிறார் என எதிர்பார்த்த பேச்சாளருக்கு ஏமாற்றம். "மேடையிலே ஏறி நின்னு பேசிப்பாரு அதில் உள்ள கஷ்டம் புரியும்" என்று கடுப்பாகச் சொல்லிவிட்டு வேகமாக நகர்ந்து விட்டார் அந்தப் பேச்சாளர். விமரிசித்த நண்பருக்கு ஏமாற்றம். நல்லதுக்குத்தானே சொன்னோம் இப்படித் தப்பா புரிஞ்சுக்கிட்டுப் பேசுறாரே! என்று ஒரு வழி ஆகிவிட்டார்.

"நீங்க சொல்றது சரி, சரியாக் கண்டுபிடிச்சீங்க இனித்தவிர்க்கிறேன்" என்று பதில் சொல்லியிருந்தால், முதலிலே சொன்னாரே, நல்லாத்தான் பேசினீங்க என்கிற பாராட்டைத் தலைப்புச் செய்தியாக இவர் எடுத்துக் கொண்டு மகிழ்ந்து இருக்கலாம்.

நம் செயல்களில் உள்ள தவறுகளை ஏற்றுக் கொள்கிறபோது அத்தவறின் வீரியத்தை நாம் அழகுறக் குறைத்துவிடுகிறோம் என்பதை ஏனோ பலர் உணர மறுக்கிறோம்.

தெரியாத குணமும் ஒருவனைப் பின்னோக்கித் தள்ளும் பரமபத சோபன படத்தில் உள்ள பாம்புகள் போன்றவை.

சொல் சுத்தம், கைச்சுத்தம் இல்லாதவர்கள் தற்காலிக உயரங்களைத் தொடலாம். இமயங்களும் ஆல்ப்ஸ்களும் இவர்களுக்கு உரியன அல்ல.

பிறரை மதியாத போக்கும் காலை வாரிவிடும் தன்மை கொண்டதே. மனத்தில் மரியாதை உண்டாகிறதோ இல்லையோ, உடலில், சொல்லில் இது வெளிப்பட வேண்டும்.

பணிபுரியும் அவ்வளவு இடத்திலும் அரசியல் என்பது நீக்கமற உண்டு. நெருப்பாற்றில் நீச்சல் அடிப்பதற்கும் இதற்கும் பெரிய வேறுபாடு இல்லை. சாணக்கியனாக மாறி இதை அழகுறச் சமாளிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

மனத்தில் தோன்றியதையெல்லாம் பேசிவிடக் கூடாது இந்த உலகில் வாய் கொண்டு வளர்ந்தவர் களைவிட வாயால் வீணாகிப் போனவர்களின் எண்ணிக்கை மிக அதிகம். வார்த்தைகள் ஒரு கைப்பிடி இலலாத, இரு முனைகளிலும் கூர்மை கொண்ட சுத்தி, குத்து பவனையும் பதம் பார்த்து விட வல்லது. எனவே சாதுரியம் தேவை.

"நல்லாத்தான், கடுமையாத்தான் உழைக்கிறேன். ஆனாலும் முன்னேற்றம் இல்லையே ஏன்?" என்று கேள்வி கேட்பவர்களுக்கு விளக்கம் தந்து விட்டேன் என்று நம்புகிறேன்.

❑○❑

குறை சொல்லவும் ஒரு தகுதி வேண்டும் என்பதும் பலரிடம் இருக்கும் தவறான எதிர்பார்ப்பு. 'இவனிடம் ஆயிரம் ஓட்டைகள். இவன் எப்படி என்னைச் சொல்லலாம்.' என்று கோபப்படுவது வாதத்தின் அடிப்படையில் சரிதான். ஆனால் பலனின் அடிப்படையில் தவறு.

தோட்டத்துக் கத்தரிக்காயை எவரும் விமரிசிக்க மாட்டார்கள். கடைக்கு, விற்பனைக்கு வந்து விட்டால் சொத்தை, பூச்சி என்று சொல்லத்தான் செய்வார்கள்.

குறைகளை ஒப்புக்கொண்டால் உலகம் அதைப் பெரிது படுத்தாது. மறுத்தாலோ, சாக்குப் போக்குச் சொன்னாலோ அதைக் கௌரவப் பிரச்சனையாக்கிவிடும்.

நம் முகத்திரை கிழிக்கப்பட்டுவிட்டதே என்பதும் பலரது கோபத்திற்குக் காரணம். யானைக்கும் அடிசறுக்கும் என்கிற விதியை ஏற்கவேண்டியது தான்.

பிறர் நகைக்க இடமாகிவிட்டதே என்பதும் சிலரது கோபம் திருஷ்டி கழியும் என்று நம்ப ஆரம்பிப்பது நல்ல ஆறுதல்.

100 சதவிகித முழுமையை இவ்வுலகம் எப்படி எதிர்பார்க்கலாம் என்பதும் சிலரது கோபம். அதில் நமக்கு நன்மை இருக்கிறதே!

குறை சொல்பவர்கள் தங்கள் மேதாவித் தனத்தைக் காட்டுகிறார்கள். காட்டிவிட்டுப் போகட்டுமே! இதற்குச் சலுகை கொடுங்கள். கோபப்படாதிர்கள்!

❑○❑

மாறாக, நாம் செலவழிப்போம், அவராகக் கேட்கட்டும், பிறகு அவரிடம் வாங்கிக் கொள்வோம் என்று பெருந்தன்மையாக முன்வந்து செலவழித்த வரை நம் சுயநலத்திற்காகத் தண்டிப்பது சற்றும் நியாயமல்ல!

ஒருவேளை எப்படி நீங்க அப்படிச் சொல்லப் போச்சு? என்று பொய்க் கோபம் காட்டினாலும், பின்னால் எவரிடமாவது சொல்வார், 'தர்றேன்னு மனப்பூர்வமாகச் சொன்னார். நான்தான் வேண்டாம்னு சொல்லிட்டேன்' என்று.

நல்லுறவு தொடர இதுவே வழி.

❑○❑

## அமிலத்திற்குள் அழுந்தியிருக்கும் அன்பு!



என் பாட்மின்டன் சக ஆட்டக்காரர் ஒருவர், நான் விளையாட்டின்போது செய்யும் தவறுகளை நைநை என்று சுட்டிக்காட்டிக்கொண்டே இருப்பார். அன்பாக, பரிவோடு சொன்னால் கூடப் பரவாயில்லை. மேலே விழுந்து குதறாத குறையாகக் கோபமாகச் சொல்வார்.

இதைப் பற்றி என் இன்னொரு சக ஆட்டக்காரர் வியந்து கேட்பார், ''என்ன சார் இது! நாம என்ன கோப்பையை ஜெயிக்கறதுக்கா ஆடுறோம்? பிசிக்கல் ஃபிட்னசுக்காகத்தானே இந்த வயசுலயும் வர்றோம்?

# சொன்னால் தவறு சொல்லாதது குற்றம்!



நமக்காகப் பிறர் செலவு செய்தால் நமக்கு மிகவும் சந்தோஷமாகத்தான் இருக்கிறது. 'ஆஹா!' எவ்வளவு நல்ல மனசு! என்று பாராட்டத் தோன்றுகிறது.

செலவு செய்பவருக்கு அதில் மகிழ்ச்சிதானாஎன்று நாம் உறுதிப்படுத்திக் கொண்டால்தான் நம் மகிழ்ச்சியில் முழுமையோ பொருளோ இருக்க முடியும்.

நமக்கு அதைப் பகிர்ந்துகொள்ள மனம் இல்லை யாதலால், நாம் அதுபற்றிக் கேட்டால் அவர் ரொம்ப வருத்தப்படுவார்; அப்செட் ஆகிவிடுவார் என்று நமக்குச் சாதகமாகக் கற்பனை செய்துகொண்டுவிடுகிறோம்.

கேட்டால் தவறாகிவிடும் என்று எண்ணுபவர்களுக்கு ஒரு வார்த்தை, நாம் கேட்கும் விதமாகக் கேட்க வேண்டும்.

'உங்களுக்கு நிறையச் செலவு வைத்து விட்டேனோ என்று குற்ற உணர்வு இருக்கிறது. 'நீங்க தவறா எடுத்துக் கலைன்னா' என்று மெல்ல ஆரம்பித்து அவர்கள் உள்ளத்தில் இருப்பதை வெளிக்கொணர வேண்டும்.

'உங்க சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடாதுன்னு நீங்க செலவழிக்கிறபோது நானும் சும்மா இருந்துடேன். எனக்கு இந்த மாதிரியான சந்தோஷத்தை, வாய்ப்பைக் கொடுங்க' என்றும் அசத்தலாம். இதற்கு அவரால் சரிவரப் பதில் பேச முடியாது.

ஒருவர் வீடு தேடி வந்து, நம்மை ஆய் ஊய் எனப் புகழ்ந்துவிட்டு கடைசியில் ஒரு மோசமான விண்ணப்பத்தை நீட்டினால், அடப்பாவி இதுக்குத்தானா இவ்வளவு நேரம் புகழ் பரணி என்று நமக்குப் பிரித்துப் பார்த்துப் புரிந்துகொள்ளத் தெரிகிறது.

ஆனால் அமிலத்திற்குள் அமிழ்ந்திருக்கும் அன்பை மட்டும் ஏன் பிரித்தெடுக்கத் தெரிய வில்லை?

❑○❑

## வரவழைத்துக் கொள்கிற வருத்தங்கள்!



தேன் சேர்க்கிற தேனீக்கள் உண்டு. கூட்டிற்கு மரக் கழிவுகளைச் சேர்க்கிற குருவிகள் உண்டு. இவை தங்கள் நன்மைக்காகச் செய்துகொள்கின்றன.

மனிதர்களே வருத்தங்களைச் சேர்க்கிறார்கள்.

எவ்வளவோ மகிழ்ச்சிகள் இருக்கிறபோது, கடற்கரையில் சிறுவர்கள் சிப்பிகளைச் சேகரிப்பதைப் போல் தங்கள் வாழ்வில் நிகழ்ந்து முடிந்துவிட்ட வருத்தங்களைத் தேடித் தேடிச்சேகரித்து வைத்துக் கொள்கிறார்கள்.

எவர் வீட்டில் மரணம் நிகழ்ந்தது இல்லையோ அவர் வீட்டிலிருந்து கடுகு எடுத்து வா என்று மரணத்திற்காக ஓலமிட்டவனைச் சமாதானப் படுத்திய தாக ஒரு மூதுரை உண்டு. இப்போதெல்லாம் தொலைக்

சமூகத்துல உங்களுக்கு இருக்கிற அந்தஸ்து (?) என்ன? இவர் நடந்துக்கிறதை எப்படிச் சகிச்சிக்கிறீங்க நீங்க?'' ஒரு வாக்கியத்தைச் சொல்லி, அவரை மேலும் வியப்பிற்கு உள்ளாக்கினேன்.

''என்னிடம் கட்டணம் வாங்கிக்கொள்ளாத என் குரு அவர்!'' என்றேன்.

கண்கள் அகல, புருவங்கள் உயர, ''பயங்கர மான ஆசாமி சார் நீங்க?'' என்றார் அவர்.

''நாங்கள் இருவரும் சேர்ந்து நன்றாக ஆடி, எதிரி களை வீழ்த்த வேண்டும் Killing instict என்கிறார்கள். இதை, அவருக்குப் பக்குவமாகச் சொல்லத் தெரிய வில்லை. அவருக்கு உள்ள அக்கறையை எடுத்துக் கொள்ளவேண்டுமே தவிர, அவர் படுகிற கோபத்தை முக்கியச் செய்தியாக எடுத்துக்கொள்ளக்கூடாது'' என்றேன் தொடர்ந்து.

''ஏன் இப்படிச் பொறுப்பில்லாமல் இருக்கே?'' என்று குடும்ப உறுப்பினர் கேட்கலாம். ஆசிரியர் கேட்கலாம். முதலாளி கேட்கலாம். மேலதிகாரி கேட்கலாம். இவுங்க ரொம்ப ஒழுங்காக்கும்? என்பது நம் மனக் கேள்வியாகவும் அமையலாம். இதுவல்ல சமாதானம்! அதானே! நாம் ஏன் இப்படிப் பொறுப்பில்லாம இருக்கோம் என்பது நம்மைப் பார்த்து நாம் கேட்டுக் கொள்கிற கேள்வியாக இருந்தால் அது நன்மையைச் செய்யும்.

காரணம், கேட்பவர் நம் விரோதி அல்லர்; நம் நலவிரும்பி. இவர்களது வார்த்தைகளில் அன்பு உள்ளடக்கமாக இருக்கிறது. ஆனால் அமிலத்தில் தோய்த்து எடுக்கப்பட்டிருக்கிறது.

காட்சிகளில் வரும் நகைச்சுவைத் தொடர்களில் (?) ஒரு பஞ்ச் டயலாக்கின் போது சிரிப்பொலி கேட்பதைக் கவனித்திருப்பீர்கள். இது ஓர் ஆங்கில உத்தியாகும். லூஸி என்ற ஒரு மேலைநாட்டுத் தொலைக்காட்சித் தொடரில் இப்பாணி பின்பற்றப்பட்டது.

இந்த வியாதி நம்மவர்களையும் தொற்றிக் கொண்டு விட்டது. இதற்கு Stock Laugh என்று பெயர். தொடரை எடிட் செய்ய அமரும் இதன் எடிட்டர், சரியான தருணம் பார்த்து இந்த ஸ்டாக் லாஃபை வெளியிடுவார்.

இது தொடர் பார்ப்பவர்களை, இந்த இடங்களில் நீங்கள் சிரித்தாக வேண்டும் என்று மறைமுகமாக வற்புறுத்தும் கலையாகும். மனதை எப்போதும் மகிழ்ச்சியாக வைத்துக்கொண்டால்தான் நாம் சாதனைகள் பல படைக்கத் தூண்டுகோலாக இருக்கும்.

வருத்தங்கள் நிறைந்த மனது பிழிந்து முறுக்கி வைக்கப்பட்ட துவைத்த துணி மாதிரி, மகிழ்ச்சியால் ஆன மனம் துவைத்ததும் உலர்த்துவதற்குப் பிரித்துப் போடப்பட்ட துணி மாதிரி, பயன்பாட்டிற்கு விரைவில் தயார்.

முறுக்கிய ஈரத் துணியோ, நாற்றம், பூசனம்!

வருத்தங்கள் நம்மிடம் ஒட்டிக்கொள்கிற போது, நம் வாழ்வில் எத்துணையோ மகிழ்சிகரமான கணங்களை எண்ணிப் பார்க்க வேண்டும். நாம் வென்று வெளிவந்த சோதனைக் களங்களை நினைவூட்டிக் கொள்ள வேண்டும். ஸ்டாக் லாஃபை சரியான தருணத்தில் வெளியிடும் எடிட்டர் போல.



# கண்டதையும் கண்டவர்களிடம் பேசுவதா?



ஏதாவது பேசிக்கொண்டே இருக்க வேண்டும் என்பது என்னதான் உணர்வோ தெரியவில்லை. கண் திறந்ததும் வாயைத் திறக்க ஆரம்பித்தால் கண்ணயரும் வரை பேசிக்கொண்டே இருப்பவர்கள் இவர்கள்.

பேசுவதற்கு எவரும் கிடைக்காவிட்டால், தெருவில் வருகிறவர்கள் போகிறவர்களிடமும் வாழைப்பழக் காரர்களிடமும் கீரைக்காரம்மாக் களிடமும் பேச்சுக் கொடுத்து வார்த்தைகளை வளர்ப்பார்கள்.

அதிகம் பேசும் சாதனையாளர்களை நான் வாழ் நாளில் பார்த்ததே இல்லை. வேறு வகையில் சொல்வது என்றால் தொணத்தொண மனிதர்கள் வெற்றியாளர் களாகப் பரிணமிப்பதே இல்லை. இன்னும் ஒரு படி மேலே போய்ச் சொல்வது என்றால் செயல் இயலாமை களே வார்த்தைகளின் வம்பளப்புகளாக வெளிப் படுகின்றன.

இவர்களை இரண்டு இரகத்திற்குள் அடைக்கலாம். முதல் பிரிவினர், ஊர் அக்கப்போர்களைப் பேசுவார் களே தவிர, வம்பு இல்லாதவர்கள்.

அடுத்த இரகத்தினரோ, விவகாரமான மனிதர்கள். புறம் பேசுவது, அவதூறு வளர்ப்பது, வதந்திகளைப் பரப்புவது இவர்களது வாய் எனும் வானொலியின்

வேலை. ஒரு பயணி, தான் பயணித்த பேருந்தின் ஓட்டுநருடன் பேச்சுக் கொடுக்க அவரும் தூக்கம் வராமலிருக்க இவரது உரை யாடலை ஊக்கப்படுத்த வம்பளப்பு வெகுநேரம் நீண்டது.

இந்த வம்பளப்பின் ஒரு பகுதியில் அந்தப் பயணி தாம் வேலை பார்க்கும் நிறுவனத்தின் உரிமையாளர் பற்றிக் கன்னாபின்னாவென்று விமர்சிக்க, ஓட்டுநரின் மைத்துனரோ அந்நிறுவன முதலாளிக்கு மிக வேண்டிய வராகப் போக, பயணியின் வேலை பறிபோயே விட்டது.

இவரிடம் பேசுவது எங்கே முதலாளியின் காதை எட்டப்போகிறது என்கிற அலட்சியம் இப்பயணிக்கு.

உரியவர்களிடமோ பேசினேன் என்பது அறியாமை யின் வாதம். உரியவர்களிடம் பேசினால் கூடப் பாதிப்புக் குறைவுதான்!

ஒரு பத்திரப் பதிவு முடியும் தறுவாயில் விற்பவரைப் பற்றி வாங்குபவர் மனக்குறை ஒன்றை வெளியிட, அது உரியவர் காதை எட்ட, பதிவே பறிபோய்விட்டது. பதிவு முடிந்தபின் பேசி யிருக்கலாமே!

வாய் அசைந்துகொண்டே இருக்கப்பிரியப் படுகிறவர்கள் இனி, பொட்டுக் கடலை தின்னட்டும். உடலுக்காவது நல்லது.

❑○❑

என்றால் வீழ்ந்திருப்பான். லிங்கன் அப்படிப் பட்டவர் இல்லை.

நம்மிடம் பணிபுரிகிற சிலரை நினைக்கிற போது நமக்குச் சலிப்பும் எரிச்சலும் கோபமும் வரலாம். ஏன் இப்படிச் சொல்லச் சொல்ல அதேதவறை உணர மறுக்கிறார்கள்? ஏன் எத்தனை முறை சொன்னாலும் ஆர்வமே இல்லாதிருக்கிறார்கள்? ஏன் இப்படி முட்டாள் தனமாகவே நடந்துகொள் கிறார்கள்? ஏன் இவர்களது மரமண்டையில் நாம் சொல்லும் எதுவும் ஏறமாட்டேன் என்கிறது என்றெல்லாம் பலமுறை உங்களை நீங்களே வினவியிருக்கலாம்.

அவர்கள் மகா திறமைசாலிகளாக இருந்தால் ஏன் உங்களிடம் வேலை செய்யப் போகிறார்கள்? தங்களுக்காக உங்களைப் பல்லக்குத் தூக்க வைத்துவிடுவார்களே!

மிகப்பெரிய தொழிலதிபர் ஒருவர் என் நண்பர். இவர் சொல்வார்; பட்டாணி போட்டால் குரங்குகள் தாம் கிடைக்கும் என்று.

நல்ல சம்பளம் கொடுத்தால்தான் திறமைசாலிகள் கிடைப்பார்கள் என்பது இதன் பொருள்.

அதுவரை இந்தப் பல்லக்குச் சுமப்பவர்களோடு நாம் போராடிக்கொண்டிருக்க வேண்டியது தான்.

❑○❑

# அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்!



பல்லக்குச் சுமக்கவென்றே சிலர் பிறந்து இருக்கிறார்கள். அதில் அமர்ந்து பயணிப்பதற்கென்றே ஒருவன் பிறந்திருக்கிறான்.

"ஏண்டா போயும் போயும் பல்லக்குச் சுமக்கிறாய்?" என்று கேட்டால், "இதற்கே எவ்வளவு கொடுப்பினை வேண்டும் தெரியுமா?" என்பான் அவன். இவனுக்கு இதற்மேல் ஆசை இல்லை.

உலக மன்னர்களை, பெரும் பதவி வகித்தவர்களைப் பட்டியலிட்டால் இவர்களுள் பலர் இந்தப் பதவிகளுக்காகச் சாசனம் எழுதப்பட்டவர்கள் அல்லர்.

அந்த இடத்தை அடைவேன்; தொடுவேன் அமர்வேன் என்று சூளுரைத்தவர்கள் பலர். பின்னாளில் அமெரிக்கக் குடியரசுத் தலைவராக விளங்கிய லிங்கனை, பள்ளி வகுப்பில் எழுப்பி அவர் ஆசிரியை கேட்டார். "நீ வருங்காலத்தில் என்னவாக வர விரும்புகிறாய்?" என்றும் லிங்கன் சொன்னார்: "நான் இந்நாட்டின் தலைவனாக வரப்போகிறேன்."

வகுப்பில் சக மாணவ-மாணவியர் கேலிச் சிரிப்புச் சிரித்தார்கள். இச்சிரிப்பில் வேறு ஒருவன்

ஒருவர் இயல்பு, சூழ்நிலை தெரிந்தும் அவருக்குக் கடன் கொடுக்கிறீர்கள். 'கொடுக்கும்போதே எனக்கு யோசனைதான். சரி, உதவுவோமேன்னு இரக்கப் பட்டதற்கு எவ்வளவு பெரிய தண்டனை பாருங்க?' என்று புலம்புகிறீர்கள். இது ஏன்?

பிள்ளைப்பூச்சி என்று தெரிந்தே இடுப்பில் கட்டிக் கொள்கிறீர்கள். பிறகு குத்துது, குடையுது என்கிறீர்கள். ஏன் இப்படி?

பிறரைப்பற்றித் தவறாகப் பேசும்போதே அதற்கு ஏகப்பட்ட விலை கொடுக்கும்படி வரும் என்று உங்களுக்குத் தெரியாதா? பிறகு ஏன் (Loose talk?) லூஸ் டாக்?

உடம்புக்கு ஆகாது என்று தெரிந்தும் நாக்கு கட்டுப்பாடு இல்லாமல் உள்ளே தள்ளுகிறோம். அவதிப்படுவது பின்னர் யார்?

உங்கள் துன்பங்களுக்கு யார் காரணம் என்று தேடித்தேடி ஆள்காட்டி விரலுக்கு வேலை கொடுத்துக் கொண்டே இருக்கும் நீங்கள், உடல் உபாதைக்கு யாரைக் காட்டப் போகிறீர்கள்?

உங்கள் திறமைகள், ஆற்றல்கள் இனிமேல் தாமாக வரும் துன்பங்களைச் சமாளிக்கப் பயன்படட்டும்.

❑○❑

# வரும் துன்பங்களும் வரவழைத்த துன்பங்களும்!



நம் மனம் இன்பத்தையே நாடி நிற்கிறது. இதைப் பெறுவது நம் கடமை. நமக்கு இதுதான் வாழ்க்கை என எண்ணுகிறது. துன்பமே வரக் கூடாது என எதிர்பார்க்கிறது.

இதெப்படிச் சரியாகும்? இரண்டும் கலந்தது தானே வாழ்க்கை. ஒவ்வொரு துன்பமும் நாம் சந்திக்கும் வேளையில் படாதபாடு படுத்தினாலும் அது நமக்கு அருமையான பாடத்தினையும், மனப் பக்குவத்தினையும் தந்துவிட்டுப் போகிறதே.

சகிக்க முடியாத பலாத்தோலுக்குள் அருமையான சுவை கொண்ட சுளைகள் இருப்பதைப் போல்தான் இதுவும்.

சரி, துன்பங்கள் வேண்டாம் என்கிறார்களே: இவர்களைப் பார்த்து ஒரு கேள்வி. உங்களது ஒவ்வொரு செயலும் நமக்குத் துன்பம் வந்து விடக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு நிகழ்த்தப் போகின்றனவா?

பங்குச் சந்தையில் முதலீடு செய்வது என்பது குதிரை முதுகில் கட்டப்படும் பந்தயப் பணத்திலும் மோசமானது என்று தெரிந்தும் முதலீடு செய்வது ஏன்?

# அநியாயத்திற்குள் தேடவேண்டிய நியாயம்!



அவர் அப்படிப் பேசினது நியாயமில்லை; அவர் அப்படி நடந்துகிட்டது நியாயமில்லை என்று அடிக்கடி நாம் நீதிபதிகளாகித் தீர்ப்புக் கூறியபடி இருக்கிறோம்.

இப்படிச் சுயதீர்ப்பு எழுதிக்கொள்கிறவர்கள் தங்கள் மனசாட்சிகளைக் கால்களுக்குக் கீழே போட்டு மிதித்துவிடுவதுடன், தங்களுக்குச் சாதகமாகப் பேசும் ஜால்ராக்களை மட்டுமே தேர்ந்தெடுத்து 'கேட்டீங்களா இந்த அநியாயத்தை' என்றவாறு ஆரம்பித்து சுகமாகக் குளிர் காய்கிறார்கள்.

ஏன்? இவர்கள் கன்னத்தில் அறைகிற மாதிரி எதிராளியின் தரப்பு நியாயத்தை எடுத்துச் சொல்லக் கூடிய ஆளாகத் தேடி வழக்குரைக்க வேண்டியது தானே? மாட்டார்கள்! ஒரு கையில் ஓசை வராது. இரு கைகளின் மோதலில்தான் ஓசைவரும். ஒரு பக்கத் தவறு என்பதே உலகில் பெரும்பாலும் இல்லை. தவறுகளின் விகிதா சாரங்களில்தான் வேறுபாடே தவிர. குறைபாடு என்பது அடியோடு ஒரு பக்கமாகச் சாய்ந்திருப்பது இல்லை.

அவர் அப்படிப் பேசினார் என்றால். அவரை அப்படிப் பேச வைத்தவர்கள் நாம். அவர் அப்படி நடந்துகொண்டார் என்றால். அவரை அப்படி நடந்து கொள்ள வைத்தவர்கள் நாம்.

அடிப்படையில் தங்களக்கக் கீழே பணிபுரிபவர்கள் என்றால் இவர்களுக்க இளக்காரம்.

இதனால், சொல்லால், செயலால் இவர்களைச் சீண்டிப் பார்த்து அவர்கள் படும் வேதனையில் அவலத்தில் மகிழ்ச்சி காண்பவர்கள் உண்டு.

இவர்கள் சாடிஸ்டுகள் எனப்படும் பெரிய அளவில் துன்புறுத்தி மகிழ்பவர்கள் பிரிவில் சேர்க்குமளவு மோசமானவர்கள் அல்லர். இவர்களுக்குச் சில படிகள் கீழே நிற்பவர்கள். சரிவர வாடகை கொடுக்காதவர்களை மற்றவர்கள் முன்னிலையில் கேவலமாகப் பேசும் வீட்டு உரிமையாளர்கள் உண்டு. நண்பர்கள் பலரும் புற்பபட முயற்சி செய்யும் ஒரு செலவினப் பயணத்தில் 'உன்னால் முடியாது நீ ஒதுங்கிக்கோ' என்று ஒரு நண்பரை மட்டும் சுட்டிக்காட்டும் ஒரு பணக்கார நண்பர் இருக்கவே செய்வார்.

ஒரு கிரிக்கெட் அணியில் அனைவரும் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது ஒருவர் தம் கடைசி ஐந்து ஆட்டங்களில் 37 ரன்தான் அடித்திருக்கிறார் என்பதைத் துல்லியமாகச் சுட்டிக்காட்டி கேலி செய்பவர்கள் உண்டு.

ஒரு குடும்பத் தலைவர், தம் தலைமைப் பதவி காரணமாக, குறைபாடுகள் உள்ள குடும்ப உறுப்பினர்களை மட்டம் தட்டிப் பேசும் தகுதி இருப்பதாக எண்ணிக் கொள்கிறார்.

தாங்கள் இப்படியெல்லாம் பேசியதற்கும் நடந்து கொண்டதற்கும் நியாயம் கற்பிக்கவும் செய்வார்கள். இவர்களுக்குச் சில வார்த்தைகள், கண்டிக்கவும்.

ஒரு சிறு தவறு ஒரு பெருந்தவறுக்குக் காரணமாக அமைவது சங்கிலி நிகழ்வுகள் என்கிற அடிப்படையில்தான்.

சமூகத்தின் நோக்கில், சட்ட நோக்கில் கைநீட்டி அடித்தவன்; தடித்த சொற்களைப் பேசியவன் அநியாய வாதியாகிறான். ஆனால், அவனை இந்த நிலைக்குத் தள்ளியவனை இந்தச் சமகமோ, சட்டமோ இரக்கத்துடன் பார்க்கிறது. இதுவே தனிமனிதக் குணமாகவும் ஆகிவிட்டது.

உங்களை ஒதுக்கி வைத்துக்கொண்டு உங்கள் செயலைப் பிறர் செய்திருந்தால் அவரை எப்படி விமர்சிப்பீர்கள்?

ஓர் அநியாயத்திற்குள் எதிரியின் கோணத்தில் நியாயம் தேடுங்கள்; குறைந்தபட்சம் மனதாவது சமாதானம் அடையும்.

❑○❑

## கிள்ளிப் பார்ப்பதில் கிளுகிளுப்பு அடைபவர்கள்!



நம்மைச் சார்ந்து வாழ்பவர்கள் என்றால் சிலருக்கு ரொம்பவும் இளக்காரம். பொருளாதார இயலாமையால் கஷ்டப்படுகிறவர்களைக் கண்டால் காசு கொழுத்த சிலருக்கு இளக்காரம். தம்மிடம் சம்பளத்திற்காக வேலை புரிபவர்கள், அலுவலக

தண்டிக்கவும், சுட்டிக்காட்டவும் உரிமை உள்ளவர் களுக்கு இன்னொரு பொறுப்பும் இருக்கிறது. உங்கள் வாத்தைகளுக்கு கனமும் மதிப்பும் இருப்பதால் தனியே அழைத்து சுட்டிக் காட்டி, 'ஏன் இப்படி? உன்னால் முடியுமோ!' என்று ஊக்கப்படுத்தும் பொறுப்புதான் அது.

உடனே நல்ல மாற்றம் நிகழ ஆரம்பித்து, அதற்கு நீங்கள்தாம் காரணம் என்று அவர்கள் உங்கள் புகழ் பாட ஆரம்பிக்க, இந்த மகிழ்ச்சிக்கு இணை அந்தக் கிள்ளலில் இருக்கிறது என்றா நினைக்கிறீர்கள்?

❑○❑



## தொழிற்சலிப்பு தலைதூக்குகிறதா?

**த**லைதூக்கத்தான் செய்யும். ஆனாலும் என் நட்பு வட்டத்திலும் வாசக வட்டத்திலும் இருவர் இதற்கு விதிவிலக்காக இருக்கிறார்கள். இவர்களை எண்ணி நான் வியக்கத் தவறுவது இல்லை.

எனக்கும் எப்போதாவது தொழிற்சலிப்பு ஏற்படுவது உண்டு. அப்போதெல்லாம் இந்த இருவரையும் முன்னுதாரண மனிதர்களாக எடுத்துக் கொண்டு சோம்பலையும் தூக்கத்தையும் விரட்டித் தள்ளி எழுந்திருப்பேன்.

உங்கள் வட்டத்திலும் இப்படி எவரும் இல்லாமலா போவார்கள். எண்ண வலையை வீசித் தேடிப்

பிடியுங்கள். இவர்களை அடிக்கடி நினைவிற்குக் கொண்டு வாருங்கள்.

இவர்கள் போக, சில கோணங்களையும் நாம் தெரிந்து வைத்துக்கொள்வது நல்லது. தொழிலில் சலிப்பு வந்தால் அது மெல்ல வெறுப்பு என்கிற அடுத்த கட்டத்திற்கு நம்மைக் கொண்டு சென்று விடும்.

தொழிற்சலிப்பு நம் தொழிலின் ஆர்வத்தைக் குறைக்க ஆரம்பித்தால், அது நம் கிணற்று நீர்வரும் ஊற்றுக்கண்களை ஒவ்வொன்றாக அடைத்து விடுவதற்குச் சமம்.

ஒரே மாதிரி செய்வதையே செய்துகொண்டு இருப்பதால்தான் சலிப்பு வருகிறது. பாணியை, அணுகு முறையைச் சற்றே மாற்றுக்ங்ள். புதிதாக ஏதும் செய்ய முடியுமா பாருங்கள் புதிதாக என்ன செய்யலாம். என்ன செய்யலாம் என்று தினமும் சிந்தித்தாலே நூறு யோசனைகள் தோன்றும். அவற்றைச் செயல்படுத்திப் பாருங்கள்.

மாறாக சலிப்பே தொடர்ந்தால் தொழிலில் மெல்ல அலட்சியம் காண்பிக்க நேரும். அலட்சியமே தவறுகளுக்கும் குளறுபடிகளுக்கும் பாதை போடும்.

இவையே திட்டுகளாகவும், விமர்சனங்களாகவும் மாறும். இவை வருமானம் எனும் அடிமடியில் கைவைக்க ஆரம்பித்துவிடும்.

நமக்கு வாழ்வின் தேவைகளில் பெரும் பான்மையைத் தருவது நம் தொழிலே. சமூகத்தில் அந்தஸ்து, பெருமை, மதிப்பு, புகழ் அங்கீகாரம், பாராட்டு என அனைத்தும் தரும் அட்சய பாத்திரம் தொழிலே! இதன் மீதா சலிப்பு? ஐயோ! கூடவே கூடாது.

